JANAVINODINI.

ஜநவிநோதிநீ.

இல. 11.] நவம்பர் மீ 1889. [புஸ்த. XX.

CONTENTS.

What is the efficacy of Prayer? 241
The wicked shall not go un-
…ished by God.................. 247

Duties of a Wife towards her
Husband (*Continued*) 251
Peculiari ies of Divine Poets
(*Continued*)......................... 254

The Life of a Bear, Chapter XV. 257
What does true Nobility consist
in?.. 259
… Anecdotes.............. 263
.... 264

அட்டவணை.

கடவுளைத் துதிப்பதேன்?........... 241
துஷ்டர்கள் கடவுளால் தண்டிக்கப்படாதிரார்...................... 247
மனைவி கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைப்பாடுகள் (தொடர்ச்சி)........................... 251
தெய்வீகக்கவிவாணர்களின் குணவிசேஷம் (தொடர்ச்சி)............ 254
ஓர் கரடியின் கதை, 15-ம் அத்தியாயம்.............................. …7
பெருந்தன்மை யதார்த்தத்தில் எதிலுண்டாகிறது?,.................. 259
விநோத … ந்தங்கள்.......... 263
வர்த்தமானக் குறிப்புகள்............ 264

MADRAS.
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

ஜநவிநோதிநி.

இல். 11.] நவம்பர் மீ 1889. [புஸ்த. XX.

கடவுளைத்துதிப்பதேன்?

உலகத்தில் கடவுள் ஒருவர் உண்டென்று நம்பும் ஆஸ்திகர்களாயுள்ளவர்கள் யாவரும் தத்தம் புத்தி கோசரத்திற்கு ஏற்றபடி அக்கடவுளைப் பற்பல மூர்த்தங்களாக மனதினால் தியானித்தும், வாக்கினால் அவருடைய குணாநுபவங்களைப் புகழ்ந்தும், விக்கிரக ஆராதனை செய்பவர்களாயிருந்தால் தமது காமுதலிய அவயவங்களினால் சோடச உபசாராதிகளைச் செய்தும் வருகிறார்கள். இவ்வாறு மனம்-வாக்கு-காயம் என்னும் மூன்று கரணங்களினாலும் ஆஸ்திகர் தமக்கு இயன்றவரையிலே கடவுளை வழிபட்டுவருகையில், இவர்களுக்கு நேர்விரோதிகளாயுள்ள நாஸ்திகர்கள் இவர்களைநோக்கி, கடவுள் பரமபிதாவாகவும், ஆன்மாக்களாகிய நாம் அனைவரும் அவரால் அளிக்கப்படுபவர்களாகவும், அவருடைய கிருபாநோக்கம் க்ஷணமாத்திரமேனும் நம்மேல் படாவிடில் நாம் ஜீவிப்பதற் கிடமிராததாகவும், ஆதாரவற்ற நம்மைக்காப்பது அவருடைய பெருங் கடமையாகவுமிருப்பது வாஸ்தவமாயின், நாம் ஏன் அவரை வழிபடவேண்டும்? நாம் அவரை நினைக்கினும் நினைக்காவிடினும் நம்மைக்காப்பது அவருடைய பெருங்கடமையல்லவா? நாம் அடிக்கடி அவரை இன்னதைத் தருவாயாக, இன்னதைத் தாராமலிருப்பாயாக என்று குறையிரந்து கேட்பது அவருக்குக் கோபத்தை விளைக்காதோ? கடவுளின் குணாநுபவங்களை எடுத்து அடிக்கடி கூறுவது அநாவசியமாகத் தோன்றவில்லையா? அவருக்கு எவ்விதத்திலும் நிகரில்லாத அற்பப்பிராணிகளாகிய இவ்வான்மாக்கள் ஒன்றுகூடிவாழ்த்துவதனால் அவர்க்கு விளையும் பயன்யாது? சிற்றறிவினனாகிய ஒரு அரசன் தனக்குக் கீழ்ப்பட்டகுடிஜனங்கள் யாவரும் தன்னைப் பலவாறாக எக்காலத்தும் முகஸ்துதி செய்வதனால் இறுமாப்படைந்து மதிமயங்கி அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறதுபோல்தானோ கடவுளும் தன்னுடைய ஆன்மாக்களின் ஸ்தோத்திரங்களுக்கிரங்கி அவர்களுக்கு வேண்டியவற்றைத் தருவார்? பளா! பளா! நன்று! நன்று! நுங்கடவுளுக்குள்ள முகஸ்துதிப்பிரியமும் அவரது விளையாட்டுத்தன்மையும்! என்று ஏளனஞ் செய்யாநிற்பர். இவ்வினாக்களுக்கு ஆஸ்திக சித்தாந்தத்தை யநுசரித்த சிறந்த பல புத்திமான்கள் கூறியிருக்கும் விடைகளின் சாராம்சத்தை இங்கெடுத்துச் சுருக்கிக்காட்டுகிறோம்.

கடவுளை நாம் வழிபட்டுவரும் முறையை மூன்று பிரிவாக வகுக்கலாம். யாதொரு பயனையுங்கருதாமலே கடவுளைத்தியானித்துப் பலவாறாக அவருடைய குணாதிசயங்களை யெடுத்து வாழ்த்துவது ஒன்று. நமக்கு வேண்டியவற்றைப் பிரார்த்தித்துக் கடவுளைக் கேட்பது ஒன்று. கடவுளின் கிருபாநோக்கத்தினால் நாம் கிடைக்கப்பெற்ற பயன்களுக்காகச் செய்ந்நன்றியறிதலாய் அவரைப் பரவுதல் ஒன்று. இம்மூவகையான வழிபாடுகளினாலும் நாம் அடையத்தக்க பயன்களை முறையே விவரித்துக்காட்டுவோம்.

நம்மினும் மேலான கடவுளொருவர் இருக்கிறாரென்றும், அவர் நம்மைப்படைத்து அளித்து அழிக்கவல்ல ஆற்றலுடையாரென்றும், அவர் நமக்குச் சுகத்தைத்தந்து துக்கத்தைப் போக்கத்தக்கவரென்றும் நாம் யதார்த்தத்தில் நம்புவோமாகில், எனவே நமக்கு வாஸ்தவத்தில் கடவுள் இருக்கிறாரென்னு மெண்ணம் உறுதியாயிருக்குமாகில், அவரது குணாநுபவங்களை யெடுத்துப் புகழவோ, நமக்கு வேண்டியவற்றை அவரைக் குறையிரந்து கேட்கவோ, நன்றியறிதலாக அவரை வணங்கவோ எண்ணம் நம்மனதில் இயற்கையிலெழும். மனுஷியர்களுக்குள்ளே நம்மினும் கல்வியிலாவது செல்வத்திலாவது மிக்கவர்களைக் கண்டமாத்திரத்தில் நம்மையறியாமலே ஓர்வகையான மரியாதையும் பயபக்தியும் நம்மனதில் இயற்கையில் உதிப்பது நம் ஒவ்வொருவருக்கும் அநுபவமாயிருக்க, முழுதொருங்குணர்ந்து எல்லாம் வல்லவராகக் கடவுளைப்பாவித்து நம்பியுள்ள ஆஸ்திகருக்கு அவரிடத்து வந்தனை வழிபாடு உண்டாவது இயற்கையே யென்பதைச்சொல்வானேன்? கேவலம் கடவுள் இல்லையென்று நம்புகிறவனெவனோ அவன் மாத்திரம் அவரைத் தியானிக்கவாவது வழிபடவாவது எண்ணங்கொள்ளமாட்டானேயன்றி ஆஸ்திகர்களாயுள்ள எத்திறத்தினரும் பிறர் தம்மை ஏவாமலே அவரைஸ்தோத்திரம்செய்யப் பின்னிடார். ஆகவே, தெய்வ உபாசனையானது தெய்வநம்பிக்கையுள்ள ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவும் தனிச்சையாகவுமுண்டாகின்ற ஒருகுணமாயிருத்தலின், ஆஸ்திகர்கள் கடவுள் தம்மைக்காக்கச் சர்வசித்தமாயிருக்க அவனை ஏனோ வீணில் துதித்து மகிழ்விக்கவேண்டும்? என்னும் வினா கேவலம் பயனற்ற வினாவாகமுடிகின்றது. ஈஸ்வரத்தியானம் ஆஸ்திகர்களுடைய மனோதத்துவ லட்சணமாயிருக்கின்றதேனும் அதை ஒவ்வொரு ஆஸ்திகனும் நாஸ்திகருடைய வினாவுக்கு மனங்கலங்காது அபிவிர்த்திசெய்யவேண்டுமென்பதற்குச் சில நியாயங்கள் கூறுகிறோம்.

முதலாவது.—நாம் கடவுளின் குணாநுபவங்களைத் தியானித்துப் பலவாறாக எடுத்துப்புகழ்வதனால் நமது துர்க்குணங்களகன்று பரிசுத்தராகின்றோம். தன் வயத்தனாதல்-தூயவுடம்பினனாதல்-இயற்கையுணர்வினனாதல் - முற்றுமுணர்தல்-இயல்பாகவேபாசங்களினீங்குதல்-பேரருளுடைமை-முடிவிலாற்றலுடைமை-வரம்பிலின்பமுடைமை என்னுங்குணங்கள் அமையப்பெற்றவராக அவரை நாம் தியானிக்கையி

ல், இவ்வருடத்திய முதலாவது சஞ்சிகையில் நாமெடுத்துவிரிவாய்க்காட்டியுள்ளபடி, அத்தியானவிசேஷத்தினுல் அக்குணங்கள் நம்முடையமனதில் படியும். கடவுளைப்போன்று பூரணமாக அக்குணங்கள் யாவும் நம்மனதில் அமைதல் சாத்தியமாகாவிடினும், கூடியவரையில் நம்மனம் இருத்தி அக்குணங்களைத் தன்னிடத்தில் அமைத்துக்கொள்ள முயலும். மனம் பளிங்குபோல் எந்தெந்தப்பொருளின் சார்பிலிருக்கின்றதோ அந்தந்தப்பொருளின் தன்மையாகத்தக்கதாயிருக்கின்றதாகையால் சற்குண சமூகமான கடவுள் மூர்த்தத்தின் தியானம் நமக்கு எல்லாவகையாலும் நன்மையைப் பயக்குமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. உதாரணமாக:— கடவுளுக்குள்ள குணங்களை ஒன்றொன்றுமெடுத்துச் சிறிதுவிவரிப்போம். பொருளையே அவருக்கு உருவமாகவும், அவரை வழிபடும் நாம் என்னென்னவிதமான பிழைகள் செய்துகொண்டுவந்தபோதிலும் நம்மை க்ஷமித்து ஆட்கொள்ளும் குணநிதியாகவும் அவரைப் பாவித்துத் தோத்திரஞ்செய்து நாம் வழிபட்டுவருவோமாயின் நம்முடைய கருணையை எதிர்பார்த்துநிற்கும் பலஜீவர்களுக்கும் நாம் நம்மாலியன்றவரையில் அன்புபாராட்டி அவற்றைப்பரிபாலித்து வருவதற்கு இடமிருக்கும். தன்வயத்தனாதலென்னுங்குணத்தைக் கடவுளினிடத்தில் நாம் சிந்திக்கச் சிந்திக்க நாமும் சுவயேச்சையான ஒரு வாழ்க்கையையடையவும், நின்மலமேனியைக் கடவுளினிடத்தில் நாம் பாவிக்கப் பாவிக்க நாமும் அசுத்தங்கள் நீங்கிக் கூடியவரையில் பரிசுத்தர்களாகவும், இயல்பாகவே பாசங்களினீங்குதல் என்னுங் குணத்தைக் கடவுளினிடத்தில் நினைக்க நினைக்க நாமும் உலகசம்பந்தமாகிய பாசபந்தங்களொழிந்து ஒழுக்கத்திற்சிறக்கவும், வரம்பிலின்பமுடைமையென்னுங் குணத்தைக் கடவுளினிடத்தில் கருதக்கருத நாமும் உலகத்திலுள்ள துக்கங்களுக்கேதுவாகிய பற்பல விஷயங்களுக் கிணங்காமல் மனக்கிளர்ச்சியுடன் சுகித்திருக்கவும், முடிவிலாற்றலுடைமை என்னுங் குணத்தைக் கடவுளினிடத்தில் நாம் எண்ண எண்ண எவ்வகைப்பட்ட ஆபத்துகளுக்கும் அஞ்சாமல் மனோதைரியத்துடனிருக்கவும் நேரிடும். ஈஸ்வரத்தியானத்தில் சதா ஈடுபட்டிருந்தபெரியோர்கள்-

"நாமார்க்குங்குடியல்லோ நமனையஞ்சோ
நரகத்திலிடர்ப்படோ நடலையில்லோ
மேமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்பமில்லை
....
கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே."

என்று கூறியிருக்கின்றனர். இதை யோசிக்கையில் பக்தர்களுக்குண்டாகும் தைரியமும் பரிசுத்தத்தன்மையும் மனக்கிளர்ச்சி முதலிய எல்லாக்குணங்களும் பகவத்தியானத்தினுல் பகவானுடைய குணவிசே

ஷங்கள் அவர்களுடைய மனதில் பிரதிபலிப்பதனாலுண்டாகின்றன வென்று தெளிவாய் விளங்குகிறது.

அன்றியும் நம்முடைய மனதிலுள்ள குற்றங்களெல்லாம் நமக்குப் புலப்படவேண்டுமானால் நம்மினும் உயர்ந்த வேறொரு பொருளோடு நம்குணங்களை ஒத்திட்டுப்பார்த்தால்தான் அவைகளெல்லாம் நமக்குப்புலப்படும். சற்குணநிதியாகிய கடவுள் நம்முடைய மனதில் குடிகொண்டிருக்கிறாரென்னும் எண்ணம் நம்மிடத்துதித்து, அதனால் அவர் கண்ணுக்குப் புலப்படாதது ஒன்றுமில்லையென்று நினைத்து, நம் குற்றங்களையெல்லாம் அந்தரங்கத்தில் அவருக்கு எடுத்துரைப்பதே பகவத்தியானத்தின் பெரும் பிரயோசனமாகும். ஒருவனுக்குத் தன்னிடத்துள்ள துர்க்குணங்களெல்லாம் ஏககாலத்தில் நன்றாய்ப் புலப்படுவதனால் உண்டாகும் நன்மையைக்காட்டிலும் அவனுக்கு உண்டாகத்தக்க மேலான நன்மை வேறே என்னுளது? இப்படிப்பட்ட பெருத்தபயனை ஈஸ்வரத்தியானம் ஒருவனுக்குக் கொடுக்கின்றதென்றால் அதனினும் பெரும்பயனைத் தரத்தக்கது ஏதேனும் ஒருவனுக்குண்டா? மஹான்களாயிருந்தவர்களும் பகவத்தியானத்தில் ஈடுபட்டிருந்தபோது,

“ குலம்பொல்லேன்குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமேபெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லேனான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற
விலங்கலேன்விலங்கலா தொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லே
னிலம்பொல்லேனிரப்பதேயீயமாட்டே
னென்செய்வான்றோன்றினேனேழையேனே.”

என்று கூறியுள்ள அமுதவசனங்களை யோசிக்கையில் ஈஸ்வரத்தியானமானது தியானிப்போனுடைய மனதிலுள்ள குற்றங்களை யெல்லாம் அவனுக்குப் பளிங்குபோல் காட்டத்தக்க அதியற்புதமான கருவியென்று தெரியவருகிறது.

இரண்டாவது.—நமக்கு வேண்டியவற்றைக் குறையிரந்து கடவுளைக்கேட்பதே பிரார்த்தனையெனப்படும். இதுவும் நமக்குப்பெரும்பயனை நல்கத்தக்கது. நமக்குவேண்டிய விஷயங்கள் இன்னின்னவையென்று நமக்கு நன்றாகத்தெரிந்து, அப்படிப்பட்டவைகள் நம்மிடத்திராமையினாலே பெருந்துன்ப முண்டாகிறதென்று நமக்கே நன்றாகத்தெரிந்தாலன்றிக் கடவுள் அக்குறைவுபாடுகளை நீக்கி நமக்கு உதவி புரியும்போது அவ்வுதவியின் பயன் நமக்கு நன்றாய்ப் புலப்படமாட்டாது. சர்வாந்தரியாமியாயிருக்குங் கடவுள் நமக்கு எந்தெந்தக்காலத்திலே என்னென்னவிஷயங்கள் வேண்டுமோ அவைகளையெல்லாம் பூரணமாய் அறிந்தவராயிருக்கினும், அவர் நமக்குப் பின்னேசெய்யப் போகும் பேருதவியின் பயனை நாம் நன்றாகவுணர்ந்து அநுபவிக்க வேண்டுமென்னும் எண்ணங்கொண்டே அப்படிப்பட்ட உதவியை நமக்குச் சீக்கிரத்திற்பு

ரியாமல், நாம் அவரைப் பன்முறையுங் குறையிரந்து கேட்குமளவும் வாளாவிருப்பர். இவ்வாறிருப்பதும் அவர் நம்மிடத்துவைத்த பெருங்கருணையின் காரியமேயன்றி வேறன்று. தன் கருத்தை வார்த்தைகள் மூலமாய் வெளியிடச் சக்தியில்லாத சிறுகுழந்தை பசியெடுத்து, கா கா என்று பன்முறையும் அழும்வரையில் சில சமயங்களில் தாய்மார் பால் கொடாமலிருப்பதை உலகத்தில் நாம் பார்த்துவருகின்றோமல்லவா? தான் அருமையாகப் பெற்றெடுத்த குழந்தை அழுவதைக் கேட்டு மனஞ்சகியாத தாய் ஏனோ அது அழும்வரையில் பால் கொடாமல் சும்மா இருக்கவேண்டும்? இதன் காரணம் நமக்கு நன்றாய்த் தெரிகிறது. அக்குழந்தையினிடத்துத் தாய்க்கு அன்பு எவ்வளவு விசேஷமாயிருக்கினும் அது பசியினால் சிறிதுநேரம் வருந்தி அழுதாலன்றித் தாய் கொடுக்கும் பால் அதற்கு நன்றாய் ஜீரணித்துப் பயன்படாது. யாதொரு குழந்தை தன் தாயை நோக்கி, கா கா என்று அழுது அவளு முன்னமே அதற்குப் பால் கொடுத்தல் முதலிய உபசாரங்கள்செய்து அதைக்காத்தல் தாயின் பெருங்கடமையாயிருந்தும் அதனிடத்தில் வைத்த அன்பின் பெருக்கத்தினால், அத்தாய் அது தன்னை அலறி அழுது கூப்பிடும் பரியந்தம் சும்மா இருப்பதுபோல், பெருங்கருணைத் தடங்கடலாகிய கடவுளும் ஆன்மாக்களாகிய நாம் நமக்கு வேண்டியவற்றை, நாமே நன்றாயுணர்ந்து அவரைப் பிரார்த்திக்குமளவும் பேருதவியை நமக்கு வழங்காது சற்றே காலந்தாழ்த்து நிற்பர். அவ்வாறு அவர் காலந்தாழ்த்து நிற்பது நம்குறையை யறிந்துகொள்ளாமையினாலன்று; நம்குறை நமக்கு நன்றாய்ப் புலப்படவேண்டும் என்னுமெண்ணங்கொண்டேயாம். இவ்வுண்மையை அறியாத சிலர் பிரார்த்தனையினால் பயனில்லையென்று பயனில்சொல் பாராட்டி மக்கட்பதடிகளாகின்றனர். இப்படிப்பட்ட வினாவை மஹாபக்திமான்களாகிய பெரியோரும் சில சமயங்களில் கடவுளைக் கேளாமல் விட்டிலர்.

"சிறுகுழவியெனைக்காவென்றாய்க்குணாயாதுறக்காக்குஞ்செய்திபோலு
மறிவிலியேன்காத்திடென்றிருக்கவுங்காத்தளிப்பதுனதருட்கேயுண்டாம்."

இவ்வாறு கேட்டிருந்தும், "ஆமாறுன்திருவடிக்கேயகங்குழையேனன்புருகேன்." என்றும், "கற்றாவின்மனம்போலக் கசிந்துருகவேண்டுவனே." என்றும் அவர்கள் குறையிரந்திருப்பதை யோசிக்கையில், நம்மைக்காப்பது கடவுளின் கடனாயிருக்கினும் நம் குறைகளை அவருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு அவருக்கு வந்தனை வழிபாடுபுரிவதனால் நமக்கே பெரும்பயன் விளைகிறதென்று தெளிவாய்விளங்குகிறது. இக்கருத்தையமைத்தே மேலோர் அடியில் வருமாறு கூறியிருக்கின்றனர்.

"தன்கடனடியேனையுந்தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே."

(இங்கு - தன்கடன் என்பது கடவுளின்கடன் எனப்பொருள்படும்.)

மூன்றவது.—நாம் கடவுளினிடத்து எக்காலத்தும் பெற்றுவரும் எல்லா உதவிகளுக்காகவும் செய்ந்நன்றி யறிதலாக அவனை மனதினால் சிந்தித்தும் வாக்கினால் வாழ்த்தியும் காயத்தினால் அவருக்கு உசிதமான காரியங்களைச்செய்தும் வருகிறோம்.

"எழுமையெழுபிறப்பு முள்ளுவர்தங்கண்
விழுமந்துடைத்தவர் நட்பு."

நல்லவர்கள் - தமக்கு ஒருகாலத்திலுண்டாகிய துன்பத்தை நீக்கினோர் யாரோ அவர்களுடைய நட்பை எழுபிறப்பிலும் மறவாது அவர்களிடத்துச் செய்ந்நன்றி பாராட்டுவார் என்று பிரமாணமிருத்தலின், நாம் பெற்றுவரும் அளவிறந்த பயன்களுக்கெல்லாம் கடவுளுக்கு நன்றியறிதலாக நாம் வந்தனை வழிபாடுசெய்தல் நம்முடைய பெருங்கடமையாயிருக்கிறது. அவ்வாறு செய்யாவிடில் கேவலம் அஃறிணைப் பொருள்களினும் நாம் கடைப்பட்டவர்களாவோம்,

"எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு."

எப்படிப்பட்ட பெருத்த அறங்களைக் கெடுத்தவர்களுக்கும் பாபவிமோசன முண்டாகக்கூடும், செய்ந்நன்றி மறந்தவர்களுக்கு மாத்திரம் பாபவிமோசனங்கிடையவே கிடையாது என்று தெய்வப்புலவர் கூறியபடியாலும், யாதொரு தீச்செயல் மகாகொடியதென்று சொல்லவேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆன்றோர் "செய்ந்நன்றிகொன்றாரிற் குற்றமுடைத்து." செய்ந்நன்றி மறத்தலைக்காட்டினும் இது பெருங்குற்றமாகுமென்று கூறும் மரபையோசிக்கையில் நன்றிபாராட்டாமை மகாபாபங்களுக்குள் நடுநாயகமென்று ஏற்படுகிறபடியாலும் கடவுளிடத்து நன்றியறிதலாக அவரைத் துதிப்பது பெருத்த நற்குணத்தின் குறியாகின்றது. "நாயனையார்கேண்மைதழீஇக்கொளல்வேண்டும்." என்னும் பிரமாணத்தினால் கடைப்பட்ட நாய்க்கிருப்பதாகத் தெரியவருகிற நற்குணமாகிய செய்ந்நன்றியறிதல் ஜீவராசிகளுக்குள்ளே மேம்பட்ட மானிடரிடத்திராவிடில் அவர்களை என்னென்று கூறுவது? இந்தவிஷயத்தை இன்னும் விரிப்பது அனாவசியம். ஆகவே செய்ந்நன்றியறிதலாக ஈஸ்வரனை வழிபடுவது மக்கட்பேற்றின் பெருங்கடமையாகின்றது.

ஆகையால் மேலே நாம் எடுத்துக்காட்டிய தியானம் - பிரார்த்தனை- தோத்திரம் என்னும் மூவகையான வழிபாடும் மானுஷிக தர்மத்துக்கு அத்தியாவசியமானதென்று தெரியவருகிறது. ஆகவே, நம்முடைய தியானம், தோத்திரம், பிரார்த்தனை இவைகளினாலே கடவுள் அடையப்போகும்பயன் ஒன்றுமில்லையென்றும், அவையெல்லாம் நம்பயனுக்காகவேயென்றும் விசதமாகத் தெரியவருகிறது. மானிடருடைய அகக்கரணம், புறக்கரணம், தத்துவங்கள் முதலிய அங்கங்களின் லட்சணத்தை யோசித்துப்பார்க்கையில், ஈஸ்வரத்தியானம் முதலிய மேலானகாரியங்களுக்காகவே அவை அமைக்கப்பட்டிருப்பனவாகத் தெரியவருகி

நடையால், தேகத்தின் பாதுகாப்பின்பொருட்டு ஆகாரந் தேடுதல் முதலிய காரியங்களைமாத்திரஞ்செய்துகொண்டிருக்கிற அஃறிணைப் பொருள்களைப்போலல்லாமல் ஈஸ்வரத்தியானம் முதலிய மேலான கருமங்களிலே இம்மானிடப்பிறவி யடையப்பெற்ற நாமனைவரும் பிரவர்த்திக்கவேண்டும். "வாழ்த்தவாயு நினைக்கமட னெஞ்சுந், தாழ்த்தச்சென்னியுந்தந்த தலைவன்." என்று பெரியோர் கூறியிருக்கின்றார்கள்.

துஷ்டர்கள் கடவுளால் தண்டிக்கப்படாதிரார்.

யாதொரு தேசத்திலுள்ளவர்கள் கூடாவொழுக்கங்களிற் சிறந்து பாபகாரியங்கள் புரிந்து ஜெகதீசருக்கு விரோதிகளாவார்களானால் அவர்கள் கடவுளால் எப்படியாவது தண்டிக்கப் படாமலிரார். சில தேசங்களில் அரசர்கள் கொடுங்கோலர்களாயிருந்து குடிகளை வருத்துவதையும், பகைவர்கள் அடுத்தடுத்துப் படையெடுத்து அவர்களை இம்சிப்பதையும், அதிவிருஷ்டி (பெருமழை) யினாலும் அனாவிருஷ்டி (மழையின்மை)யினாலும் பெருவாரி முதலிய கொள்ளை நோய்களினாலும் தீமுதலிய ஆபத்துகளினாலும் பற்பல துன்பங்கள் நேரிடுவதையும் யோசித்துப்பார்க்கையில், தெய்வபக்தி-நல்லொழுக்கம்-அன்புடைமை-அருளுடைமை-பெரியோர்வழிபாடு - வருணாச்சிரமதர்மம் - கற்புமேம்பாடு-பிறனில்விழையாமை முதலிய சற்குணங்கள் குன்றி, பொய்-கொலை-களவு-கள்-காமம் என்னும் பஞ்சமகாபாதகங்களும் அக்குடிகளிடத்து மேலிட்டிருப்பதால் கடவுள் அக்குடிகளிடத்து அருவருப்புகொண்டவராகித் தமது மறக்கருணையினால் அவர்களைத் தண்டித்து வருகிறாரென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இவ்வாறு தண்டிக்கவேண்டுமென்னும் எண்ணத்தை முன்னிட்டே கடவுளானவர் துர் எண்ணங் கொள்பவர்களுக்கும் சில காலத்தில் சார்பாயிருந்து அவர்கள் மூலமாக அக்கிரமஸ்தர்களைத் தண்டிப்பதுண்டு. கெட்ட எண்ணங் கொள்பவர்களுக்கும் ஈஸ்வரன் அநுகூலமாயிருந்து அவர்களை ஜெயமடையச் செய்கின்றாரே, இதென்ன அநியாயம்! அவருடைய பொருளுடைமைக்கு இது அழகா? என்று நாம் அவரை வைவதிற்பயனில்லை. அவருடைய செய்கைகளெல்லாம் ஏதோ ஒரு நற்காரியத்தை முன்னிட்டுத்தானிருக்குமென்றுமாத்திரம் நாம் திடசித்தர்களாயிருக்கவேண்டும். இக்கருத்தையமைத்தே பெரியோர்களும், "நீயெப்படி வகுத்தாலுநன்றே நின் பெருங்கருணை." என்றார்கள். துர்எண்ணங்கொண்ட ஒருவனுக்கு ஈஸ்வரன் அநுக்கிரகித்து அவனைக்கொண்டு துஷ்டர்கள் பலரைத் தண்டித்ததற்கு உதாரணமாகப் பூர்வ விர்த்தாந்தமொன்றை அடியில் எழுதுகிறோம்:—

அவந்தியென்னும் தேசத்தரசனாகிய குணசேகரனென்பவன் தனதிராச்சியத்தைப் பகைவன் பற்றிக்கொண்டதனால் தன்னாட்டை

விட்டுத், தனக்கு மிகவும் நம்பிக்கை யுள்ளவனுயும் புத்திசாலியாயும் யோக்கியனுயுமிருந்த. ஒரு தவசிப்பிள்ளையுடனே கூட அந்நியதேச சஞ்சாரம் பண்ணிக்கொண்டும், தனக்கு மறுபடி அரசாட்சி கிடைக்க வேண்டுமென்று அநேக ஆலயங்களுக்குச்சென்று வணங்கிக்கொண்டும், பற்பல புண்ணியதீர்த்த ஸ்நாநமும் அநேக திவ்வியக்ஷேத்திரவாசமும் பண்ணிக்கொண்டும் கடைசியில் கோசலமென்னு மொருபட்டணம் வந்து சேர்ந்தான். அப்பட்டணத்தில் என்ன செய்தியென்று அவ்வூர் ஜனங்களைக் குணசேகரன் விசாரித்தவளவில், அவர்கள்-அப்பட்டணத்து அரசன் இறந்துவிட்டானென்றும், அவனுக்குப் பிள்ளைகளாகிலும் பந்துக்களாகிலும் கிடையாதென்றும், அதுகாரணமாக அவ்வரசனது மந்திரிகளும் சேனுபதிகளும் அவ்வூர்ப் பெரிய மனிதர்களும் அவ்வரசைக் கைக்கொள்ளவேண்டுமென்கிற ஆசையினுல் அது கிடைத்தற்குரிய உரிமைகளைச்சொல்லிக் தங்களுக்குள்ளே சிலகாலமாகக் கலகமிட்டுக்கொண்டிருந்தார்களென்றும், இப்போதுதான் அவர்கள் அவ்வரசனது பட்டத்துயானையைக் குளிப்பாட்டி அலங்கரித்து அதற்குத் தூபதீபங்கள் காட்டி அதன் துதிக்கையில் ஒரு பூமாலையைக் கொடுத்து அதை அப்பட்டணத்து மன்றுபடி-மந்தைவெளி முதலான வீதிகளில் திரியவிட்டு, அவ்வேடிக்கைபார்க்கும் ஜனங்களில் யாருக்கு அந்த யானை அப்பூமாலையைச் சூட்டுகிறதோ அவரையே அரசனுகக் கொள்ளவேண்டுமென்று இறுதியாகத் தீர்மானித்திருக்கிறார்களென்றும், அந்த விஷயம் இன்னும் சில தினங்களில் நடக்கப்போகிறதென்றும் சொன்னுர்கள். அதுகேட்ட குணசேகரன் இன்னும் சிலநாள்கள் நாமும் இவ்விடத்திலேயே காத்திருப்போமாகில், அந்தக் காரியம் நடக்கும்போது ஒருவேளை அப்பட்டத்து யானை தெய்வகடாக்ஷத்தினுல் நமக்கே அப்பூமாலையைச்சூட்டினுல் நாமே அரசாட்சி செய்யலாமென்று நினைத்துகொண்டு, அவ்விடத்தில் அவ்விஷயம் நடக்குமட்டும் வசித்திருந்தான். கடைசியாய் ஒருநாள் நாளதுமீ இன்னதேதியில் இந்த நகரத்திற்கு அரசனை ஏற்படுத்தும்படியாய்ப் பட்டத்துயானை தன் கையில் ஒரு மாலையை எடுத்துக்கொண்டு புறப்படப்போகிற தாகையால் இந்த நகரத்திலுள்ள பெண்பிள்ளைகள்-ஆண்பிள்ளைகள்-உள்ளூரார் அயலூரார் முதலிய யாவரும் அவரவர் வீட்டுக்குள்ளே யிருக்கவேண்டாம்; வெளியான ஸ்தலங்களிலே வந்து நிற்கவேண்டியதென்று அவ்வூர் தானுபதிகள் பறைபறைவித்து விளம்பரம் பண்ணினுர்கள். அப்பிரகாரமே நியமித்ததினத்தில் அப்பட்டணத்திலுள்ள அனைவரும் தங்கள்தங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டு வீதிகளில் வந்து காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பட்டத்துயானை நன்றுய் அலங்கரிக்கப்பட்டுத் தன் துதிக்கையில் ஒரு பூமாலையோடு பாகனில்லாமல் தனித்துப் புறப்பட்டுத் தன்னிச்சைப்படி அவ்வூர் வீதிகளிலும் மன்றுபடிகளிலும் மந்தைவெளிகளிலும் மைதானங்களிலும் திரிந்துகொண்டிருந்தது. அப்போது அந்தத்திரள்களில் குணசேகரனும் அவனுடன் வந்த தவ

சிப்பிள்ளையும் கூடவந்து நின்றார்கள். அப்போது அங்குள்ளவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே, எனக்கு இந்த அரசாட்சி கிடைத்தால் நான் பற்பல தேவாலயங்கள் கட்டுவேனென்றும், எனக்குக் கிடைத்தால் நான் சோட்ச மஹாதானங்கள் செய்வேனென்றும் ஈஸ்வரனைப் பலவாறாகப் பிரார்த்தித்துக்கொண்டார்கள். இப்படியே பலரும் பலவிதமாகப் பிரார்த்தனை செய்துகொண்ட காலத்தில், அங்கிருந்து இவற்றையெல்லாம் கேட்ட குணசேகரனும்-கடவுள் கிருபையினால் இவ்வரசாட்சி எனக்குக் கிடைக்குமானால், மேற்சொன்னவர்களெல்லாம் செய்துகொண்ட பிரார்த்தனைகள் யாவற்றையும் செய்து முடிப்பதேயல்லாமல் அவர்களனைவரையும் க்ஷேமமாய் வைத்துக்கொண்டு என் அரசைச் செங்கோன் முறையோடு செலுத்துவதுமன்றிக் குடிகளுக்கு எவ்வித வரியும் விதிக்காமலே அவர்களை என் இன்னுயிர்போல் காப்பேனென்னும் பிரார்த்தனை செய்துகொண்டான். இவையனைத்தையுங் கேட்டிருந்த அத்தவசிப்பிள்ளை-இவ்விடத்தில் நின்ற சகலரும் நன்மார்க்கங்களிலே ஒரே மாதிரியாய்ப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தால் கடவுள் இவர்களுக்குள் யாருக்குத்தான் கொடுக்கக்கூடுமென்று சிந்தித்து; ஆயினும் ஒருகைபார்ப்போமென்று தீர்மானித்து அவற்றிற்கெல்லாம் நேர்மாறாக, இவ்விராச்சியம் கடவுள் கிருபையால் எனக்குக் கிடைத்தால், அபாரமானவரிகளை விதித்துக் குடிகளைப் பிடிப்பதும் முன்புள்ள தேவாலயங்களை இடிப்பது, சத்திரம் சாவடிகளைப் பிரித்துப் பாழாக்குவது முதலான சகலவித அநியாயங்களுமடங்கிய கொடுங்கோன்முறையே செலுத்துவேனென்று ஊக்கக் கூவிப் பிரார்த்தனை செய்துகொண்டான். அப்படியிருக்கையில் அப்பட்டத்துயானை அந்தத் தவசிப்பிள்ளைக்கே அம்மாலையைச் சூட்டினது. அதனால் உடனே அவ்வரசாட்சி அத்தவசிப்பிள்ளைக்குக்கிடைத்தது. அத்தவசிப்பிள்ளை யாவரும் அதிசயிக்க அவ்வரசைக் கைக்கொண்டான். அவன் உடனே தன் பழைய எஜமானனாகிய குணசேகரனை அழைப்பித்து, உமக்கு என்னரசில் ஒரு மேன்மையான உத்தியோகந்தருவேன், நீர் இங்கேயே இருமென்று சொன்னான். ஆனால் அவ்வரசன் தன்னிடத்திலே சேவித்தவனிடத்தில் தான் சேவிக்க மனமில்லாமையால், அவன் பழையபடி தலயாத்திரையே உத்தமமென்று கருதி அவனுக்கு இனியமொழிகள் சொல்லி ஆசிர்வாதங்கூறி அப்பாற்போய்விட்டான். பிறகு இப்புத்தராசன் தன் அரசாட்சியைச் செய்யத்தொடங்கி அத்தேசத்திலுள்ள தேவாலயங்களின் வர்த்தனைகளைக் குறைத்தான். இடிந்த கோயில்களைக் கட்ட உத்தரவுபண்ணவில்லை. குளங்களெல்லாம் தூர்ந்தன. பலசத்திரங்கள் பாழாயின. குடிகளுக்கு அபாரமானவரிகள் விதிக்கப்பட்டன. இவ்வண்ணமாய்ச் சகலவித அநியாயங்களுஞ்செய்து அப்புத்தராசன் குடிகளைப் பலவிதத்திலும் நெருக்கினான். மந்திரி பிரதானிகள் தனபதி படைத்தலைவர் முதலாயினோர் வார்த்தைகளை அவன் ஏற்றுக்கொண்டதேயில்லை. இப்படி பதினைந்துவருஷம் அப்பிரஜைகள்

வருந்தினபின்பு, இவ்வரசன் யாரைக்கொண்டு நல்லுரைத்தாலும் கேளாமையால், இவனுக்கு முன்னே எஜமானனாகவிருந்தவன் சொன்னால் ஒருவேளை அவன் வார்த்தையைத் தள்ளானென்று கருதி அவர்கள் எங்கேயோ ஒரு தேசத்திலிருந்த அவ்வெளிய அரசனைக் கண்டுபிடித்து, வருந்திய பிராஜைகளாகிய எங்களுக்காக நீர் உபகாரஞ் செய்தால் நல்லதென்று அவனுக்குத்தோன்றும்படி தங்கள் குறைகளை அவனோடு சொல்லி அவனைத் தங்கள் பட்டணத்துக் கூட்டிவந்தார்கள். அப்பழைய அரசனாகிய குணசேகரன் தான்வந்தசெய்தியைத் தவசிப்பிள்ளையாகிய அப்புத்தரசனுக்கறிவித்தான். அவன் திடீரென்றெழுந்து தன் பரிசனங்களில்லாமல் ஒன்றியாய் எளியவேஷத்தோடும் அங்கத்தோடும் குணசேகரனை எதிர்கொண்டழைத்துப்போய்த் தன் சிங்காதனத்தில் உட்காரவைத்துத் தான் தவசிப்பிள்ளையாய் அவனிடத்திற் சேவித்தகாலத்திலிருந்த அவ்வளவு பயபக்தியோடே சர்வவித உபசாரமும் அவனுக்குச் செய்தான். அப்போது குணசேகரன் அத்தவசிப்பிள்ளையாகிய மன்னனையும் அத்தேசத்துப் பிராஜைகளில் பெரியமனிதர்களையும் அவரவர்கட்குத் தகுந்த ஆசனத்தில் உட்காரவைத்துக்கொண்டு, அத்தேசத்துப் பிராஜைகள்மேல் அப்புத்தரசன் கொடுங்கோல் செலுத்துவதைக் குறித்து அவனோடு பேசினான். அதற்கு அவன் குணசேகரனைநோக்கி, ஐயா! நீங்களெல்லாம் இவ்வரசு உங்களுக்குக்கிடைத்தால் என்னென்ன செய்வதாகத் தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்துகொண்டீர்கள்? அது உமக்கு ஞாபகமிருக்கிறதா? என்றான். அதுகேட்ட குணசேகரன் - எங்களுக்கு இராஜ்ஜியங்கிடைத்தால் அநேக நன்மைகளையெல்லாம் இத்தேசத்துக்குச் செய்வதாகப் பிரார்த்தித்தோமென்றான். அதற்கு அத்தவசிப்பிள்ளைவேந்தன் - அக்கடவுளுக்கு அத்தருணத்தில் நானென்னவேண்டிக்கொண்டது? என்றான். நீர் இத்தேசத்தில் சகல அக்கிரமங்களும் செய்வதாக வேண்டிக்கொண்டீர் என்று குணசேகரன் மறுமொழிகூறினான். அதற்கு அத்தவசிப்பிள்ளை - உங்களிஷ்டப்படி இவ்வரசாட்சி உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் பிரார்த்தித்தபடி நடத்துவது உங்களுக்கு அவசியமாயிருக்குமல்லவா? என்றான். அதற்குக் குணசேகரன் - ஆம், அவனவன் பிரார்த்தித்துக்கொண்டபடி செய்வது அவனவனுக்கு அவசியந்தானென்றான். அதுகேட்டு தவசிப்பிள்ளைஇராஜன் இவ்வரசாட்சி எனக்குக்கிடைத்தபோது நானும் என் பிரார்த்தனைப்படி செய்வது எனக்கும் அவசியமல்லவா? என்றான். அதுகேட்ட குணசேகரன் மறுமொழிசொல்ல நாவெழாதிருந்தான். அப்போது தவசிப்பிள்ளைவேந்தன் - தன் எஜமானனாகிய குணசேகரனைப்பார்த்து, ஐயா! நம்முடைய பிரார்த்தனைகளுக்கு முன்னமே இவ்வூர்க்குடிகள் பொய் கொலை களவு கள் காமம் என்கிற பஞ்சமகாபாதகங்களையும் இடைவிடாமற் செய்துகொண்டு தெய்வத்திற்கு ஒப்பாதவர்களாயிருந்திருப்பார்கள்; அதனால் அவர்களைத் தண்டிப்பிக்க எனக்கிவ்வரசாட்சியை அத்தெய்வம் கடாட்சித்தது; அ

த்தண்டனை இப்பதினைந்து வருஷத்திற்குள்ளேயாய்விட்டதுபோலும்; பிறகு இப்பிரஜைகள்மேல் அத்தெய்வத்திற்கு இரக்கம் பிறந்திருக்கிறதாகத் தெரிகிறது; ஆதலாற்றான் உம்மை இவர்கள் இத்தனைநாள் பொறுத்து இப்போதிவ்விடம் அழைத்துவந்தார்கள்; இனி இவ்வரசாட்சியை நீரே ஏற்றுக்கொண்டு என்னையும் அவர்களையும் காத்தாட்சியும்; என்பாக்கியத்துக்கு நீர்தான் மூலமாகையால் இப்போதும் நீர்தான் எனக்கு எஜமானனென்று உடனே தன் முத்திரையையும் பொக்கிஷத்தையும் அவனுக்கொப்புவித்துத் தான் குணசேகரனிடத்து ஒரு பெரிய உத்தியோகத்தை வகித்துப் பழையபடி நன்றிபாராட்டிவந்தான். குணசேகரன் அவனுடைய இரப்புரையை மறுக்கமுடியாதவனாகி அவ்வரசைக் கைக்கொண்டு செங்கோல் செலுத்தி நன்றாய் வாழ்ந்திருந்தான். குடிகள் பதினைந்துவருஷத்திய தண்டனையால் புத்திவந்து சீர்ப்பட்டார்கள். தலைப்பிள்ளையாயிருந்து புத்தரசனானவனை முன்னேவைத்த அத்தேசத்துப் பிரஜைகள் யாவரும் இப்போது மிகவும் சிலாக்கியமாகப்பேசி அவனை வாழ்த்தத் தலைப்பட்டார்கள்.

மனைவி கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைப்பாடுகள்.

(தொடர்ச்சி.)

உலகத்தாருய்ய அவதரித்து ஆதியில் நீதிமார்க்கங்களை எளியநடையில் அருளிச்செய்த ஔவைப்பிராட்டியாரானவர் ஒருநாள் ஒருவன் வீட்டிற்சென்று, அப்பா! எனக்கு மிகப்பசியாயிருக்கிறது, கொஞ்சம் அமுதளித்துப் பசியையாற்றக்கடவாயென்று குறையிரக்க, அது கேட்ட அவன் என்றுமெய்தாத பெருமகிழ்ச்சியெய்தி அப்பிராட்டியாரை அதிக உபசாரத்துடன் உள்ளே அழைத்துக்கொண்டு சென்று ஓர் ஆசனத்திலெழுந்தருளச்செய்து, உள்ளேசென்று தன் மனைவியுடன் உட்கார்ந்துகொண்டு அவள் முகத்தைத்துடைத்து மயிர் சிக்கறுத்து வேண்டியவரையில் இதமான வார்த்தைகளைச்சொல்லி, பெண்ணே! நாமிருவரும் பூர்வஜன்மங்களிற்செய்த தபோபலத்தினாலே ஜகன்மாதாவாய் விளங்கும் ஔவைப்பிராட்டியார் நமது வீட்டில் அமுதுகொள்ளத் திருவுளங்கொண்டு எழுந்தருளினார், நமது பாக்கியமே பாக்கியம், இன்றல்லவோ நமது இல்வாழ்க்கையின் சிறப்பு வெளிப்பட்டது, என்று பலவாறாக வியந்து, அம்மாது சிரோன்மணி பசியால் மிகவருந்தாநின்றாள் அதிசீக்கிரத்தில் அறுசுவையோடுங்கூடிய திவ்விய போஜனம் சமைத்துப் படைக்கவேண்டுமென்றுகூற, இவையனைத்தையுங் கேட்ட அவனது மனைவி கோபாவேசங்கொண்டு, உன் தாத்திற்கு ஒரு விருந்துகூடவா? உனக்குத் தான் சமைத்துப்போடச் சரியாய் எப்பொழுதுமுழுதும்போய்விடுகிறதே, இன்னொருத்திக்கும் ச

மைக்க என்றால் முடியாது, உனக்குச் சமைத்துப்போட்டுக்கொண்டு வருகிறதினுவல்லவா நீ இன்றொருத்தியை அழைத்துவந்து அவளுக்கும் சமைக்கச்சொல்லுகிறாய்? வருகிறவர்களுக்கெல்லாம் நானென்ன அடியாளா? உனக்குக்கூட இனிச் சமைக்கமாட்டேன், ஓடிப்போவென்று அவ்விடத்திருந்த பழைய முறத்தை யெடுத்துக்கொண்டு ஓடோட அடித்துத் துரத்தினாள். இதுகண்டு அங்கிருந்த ஔவைப்பிராட்டியார் - இதென்ன அடங்காப்பிடாரியாயிருக்கின்றதே, ஆவேசமிருந்து கூத்தாடுகின்றதே, நம்மையும் பலிகொள்ளும்போல் தோன்றுகின்றதே யென்று நடுநடுங்கி அங்கிருந்து அதிவிரைவாக மற்றொருவன் வீட்டிற்சென்று அவ்வீட்டுக்குடையானைக்கண்டு, அப்பா! எனக்குப் பசியாயிருக்கிறது, கொஞ்சம் அமுதுபடைக்கவேண்டுமென்று அதோ இந்தாறுவீட்டிற்கப்பால்வசிக்கும் ஒரு புண்ணியவான் வீட்டிற்சென்று கேட்டேன்; அவன்-

"இருக்க முகந்திருத்தி யீரொடுபேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்பப்—பொருந்தவே
யாடினாள்பாடினாளாடிப் பழமுறத்தாற்
சாடினாளோடினான்."

என்று இவ்வெண்பாவைச் சொல்லிமுடித்தார். அதுகேட்ட அவன் மிகவும் துக்கங்கொண்டவனாய்த் தன்மனையாளும் அப்படிப்பட்டவள் தானேயென்பதைத் தன் மனதில் நினைத்துக்கொண்டு, ஆயினும் நமது மனையாள் அவ்வளவு பயிரங்கமாய் வெளிக்குவரமாட்டாளென்ற நிச்சயத்தோடு அந்த ஔவைப்பிராட்டியாரை அவ்விடத்திலேயே இருக்கச் சொல்லித் தான் மாத்திரம் உள்ளேசென்று மனைவியுடன் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் குறைவறச்சொல்லி அதிசீக்கிரத்தில் சமைக்கும்படி கட்டளையிட்டான். இவைகளைக் கேட்ட அவன் மனைவி தனக்கு எவ்வளவும் திருப்தியில்லாதகாரியமாயிருக்கினும் கணவனுடன் எதிர்த்துப்பேசும் வழக்கமில்லாதவளானபடியால் ஒருவாறாக ஒத்துக்கொண்டு மனவெறுப்புடன் அதிசீக்கிரத்தில் சமைத்துக் கணவனுக்குத் தெரிவித்தனள். அவன் ஔவையாரை அதிக உபசாரத்துடன் அழைத்து இலையில் போஜனத்தைப் பரிமாறின உடனே, அதைக்கண்ட ஔவையார் அவன் மனைவியிடத்து அன்பில்லாமையைக்கண்டு,

"காணக்கண்கூசுதே கையெடுக்கநாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கெ
னென்பெல்லாம்பற்றி யெரிகின்றதையையோ
வன்பிலாளிட்டவமுது."

என்று இவ்வெண்பாவைச்சொல்லி முடித்துவிட்டு, அங்கு நின்றும் புறப்பட்டு இனி இவ்வூரிலெங்கும் போகக்கூடாது, இவ்வூர் ஸ்திரீகளெல்லாம் அடங்காப்பிடாரிகளாயிருக்கின்றார்களாகையால் நாம் அடுத்தவோரூருக்குச் செல்வோமென்று நிச்சயித்து அதற்குச் சமீபத்திலிருந்த புள்ளூர் என்னும் ஊருக்குச் சென்று அவ்வூரில் கணவனும் மனை

வியும் ஒரே மனதுடன்வாழ்ந்துகொண்டிருந்த ஓர் வீட்டிற்புகுந்து அவ்வீட்டிற்குடையானாகிய பூதனென்போனைக்கண்டு தனக்குப் பசியாயிருப்பதையும், அதை நீக்கிக்கொள்ள இதற்குமுன் தான் சென்றதையும், அவ்விடங்களில் நடந்த விருத்தாந்தங்களையும் விவரமாக அந்த ஔவைப்பிராட்டியார் சொல்லி முடித்தனர். அதுகேட்டு அவன் மிகவும் பரிவுடன் அவ்வம்மையாருக்குத் தன்னாற்கூடியவளவில் திரிகரண சுத்தியாய் வழிபாடுசெய்து தன் மனைவியையும் அழைத்து அவ்வம்மையாரை வணங்கிக்கொள்ளச்சொல்லி அவருக்குத் தக்க அறுசுவையோடுகூடிய போனகமமைக்க வறுமையின் கொடுமையால் தமக்கு வலாதிருப்பதை நினைந்து, இருவரும் உள்ளம்நைய துக்கித்துப் பிறகு நமக்குள்ளதை ஒளிக்காமல் சமைத்துப் போடுவோம் என்ற நிமாணத்துடன், தாங்கள் சாப்பிடும் வரகரிசிச்சோற்றைச் சமைத்துக் கத்தரிக்காய் வற்றலைவறுத்து எருமைமோர் கொஞ்சம்வாங்கிக்கொண்டுஅவ்வம்மையாருக்கு அதிக ஆவலுடன் இருவர் மனமும் ஒருமித்து முகமலர்ச்சியோடு சோடசோபசாரங்களும் செய்து இனியமொழிகளைக்கூறி அவ்வரகரிசிச் சோற்றை இலையிற்படைத்து எருமைமோர் விட்டுக் கத்தரிக்காய் வற்றலைவைத்து உண்ணும்படி வேண்டினார்கள். அதுகண்ட ஔவைப்பிராட்டியார் அவ்விருவர்கள் மனவொருமையையும் தம்மிடத்து அவர்கள் பாராட்டும் மெய்ப்பரிவையுங்குறித்து திருவுள்ளத்திற் களிகூர்ந்து அவ்வமுதை வயிறாரவுண்டு பசிதீர்ந்து,

“வரகரிசிச்சோறும் வழுதுணங்காய்வாட்டும்
முரமுரெனவே புளித்தமோரும்—பிரியமுடன்
புள்ளூர்வாழ்பூதன் புகழ்ந்துபரிந்திட்டசோ
றெல்லாவுலகும்பெறும்.”

என்று பாடி முடித்துச்சென்றனர். அதுமுதல் அப்பூதனென்போனுக்கு அஷ்ட ஐஸ்வரியமும் பெருகியது. மேற்கண்டமாதிரியான துஷ்டஸ்திரீகள் உலகத்தில் அநேகரிருக்கின்றார்களென்பதை நன்குணர்ந்து கணவனுக்கேற்ற காதலியில்லாவிடத்து இல்லறவாழ்க்கை நடப்பது துர்லபமென்றும், அப்படிப்பட்ட காதலியை வாய்க்கப்பெற்றவன் அவளுடனிருந்து சதா அல்லற்படுவதினும் உடனே துறவாச்சிரமத்தைப் பூண்பதே நலமென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு, மேற்சொன்ன கருததுக்கள் யாவையுமடக்கி ஔவைப்பெருமாட்டி-

“பத்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானா
லெத்தாலுங் கூடியிருக்கலாஞ்—சற்றேனு
மேறுமாறாக விருப்பளேயாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்.”

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினார். இன்னும் கணவனெண்ணத்திற்கு மாறான எண்ணமுடைய மனைவி அக்கணவனுயிர்க்

ருக் காலனைப் பொப்பாமென்றும், அப்படிப்பட்டவளை மனைவியாகப்பெற்றவனுக்கு வேறே யமன் வேண்டியதில்லையென்றும் பொருள்பட

"ஐயருக்கமுதுபடையென்றவந்தாய் நீயுமாண்பிள்ளையென்றெண்ணவோ
வரிசியெங்கேபானைசட்டியெங்கே யென்புளைவன்சொன்னவகைகளெல்லாம்
பையவேகொண்டுவந்தாலுஞ்சமைக்கப்படாதலோகுதென்று
பாயிற்கிடப்பள்ளினமாயொன்றுபேசிடிற்பாருணக்கேற்றபுத்தி
செய்யவல்லேனென்பன்சற்றடித்தானஞ்சமின்றிறேன்கூடவெனத்
தெருவிடுதோறுமுறையிடுபெண்டிருண்டெனிற்றீயமன்வேறுமுண்டோ."

ன்று பிறரும் கூறியுள்ளனர்.

ஆகையால் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஸ்திரீகளும் தத்தம் கொழுநர்சொற்படி நடக்துவந்தால் மாத்திரம் இல்வாழ்க்கை இடையூறின்றி நிறைவேறுமென்பதுணர்ந்து, கூடியவரையில் காதலர் சொல்வழி நீதநடந்து இம்மை மறுமைப்பயன்களை அடைவாராக. சுபம்!

தெய்வீகக் கவிவாணர்களின் குணவிசேஷம்.

(தொடர்ச்சி.)

மதுரையென்னும் திவ்விய க்ஷேத்திரத்திலே முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களும் இறந்த காலத்திலே தெய்விகக் கவிவாணராகிய பொய்யாமொழிப் புலவரென்னும் ஒருவர் இருந்தார். அவர் அக்காலத்தில் மதுரையை யரசாண்டிருந்த பாண்டியனைக் காணவேண்டுமென்று நெடுநாளா யெண்ணிக்கொண்டிருந்து ஒருநாள் ஒரு நல்ல சுபதினத்தையாராய்ந்து நல்ல முகூர்த்தத்தில் அப்பாண்டியன் சமுகத்திற்சென்று நின்றனர். அவரைக்கண்ட அரசன் அவரது பெருமையறியாதவனும் அப்புலவரைப்பார்த்து, நீர் யார்? உமது பெயர்யாது? என்ன வேண்டி யிங்குவந்தீர்? என்று கேட்க, அதற்கப்புலவர், மகாராஜாவே! நாமிருப்பது இம்மதுரையேயாம், எமது பெயர் பொய்யாமொழிப்புலவரென்று சொல்வார்கள், உம்மைக் காணவேண்டி வந்தனம் என்று விடையளித்தார். அதுகேட்ட அப்பாண்டியன் குலுங்கக்குலுங்க நகைத்து, என் ஐயா! நீர் சொல்லுகிறது விந்தையாயிருக்கிறதே! முன்னிருந்த சங்கத்தவர்களுக்குத்தான் பொய்யடிமையில்லாப் புலவர்களென்று பெயர், அதற்கேற்றபடி அவர்களிடத்தில் மகிமைவிளங்கியிருந்தது, அப்படியிருக்க, நீர் இப்போது நம் பெயர் பொய்யாமொழிப்புலவர் என்கின்றீரே, அவர்களிடத்தில் இருந்த மகிமை உமக்குண்டா? என்றான். அதற்கப் புலவர்- நீர் என்னிடத்தில் பொய்யாமொழியிருப்பதை எம்மாதிரியாய்ப் பரீட்சிக்கவேண்டுமோ அப்படி பரீட்சிக்கலாம் என்றார். அதுகேட்ட பாண்டியன்-அப்படியானால் முன்னிருந்த சங்கப்புலவர்களிருந்த சங்கப்பலகை பொற்றாமரைத் தீர்த்தத்தில் முழுகியிருக்கின்றது, அப்பலகை

யை மிதக்கச்செய்து அதன்மீது சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பது பேரும் உமக்கு இப்பெயர் தருமென்றும், உமது தமிழ் தமது தமிழை யொக்குமென்றும் ஒப்புக்கொள்ளச் செய்வீராகில் அப்போதுதான் உமக்கிப்பெயர் நிலைக்குமென்றான். அதுகேட்ட புலவர் - ஆ ஆ, அப்படியே ஈஸ்வரர் அநுக்கிரகத்தினால் நடக்குமென்றுசொல்லி உடனே,

"பூவேந்தர்முன்போற் புரப்பாரிலையெனினும்
பாவேந்தருண்டென்னும் பான்மையாற்—கோவேந்தன்
மாறனறிய மதுராபுரித்தமிழோர்
வீறணையே சற்றேமித."

என்னும் வெண்பாவைப்பாடி முடித்தார். உடனே அநேககாலத்திற்குமுன் அப்பொற்றாமரைத் தீர்த்தத்தில் முழுகி உருத்தெரியாமல் மறைந்துகிடந்த அச்சங்கப்பலகை அத்தீர்த்தத்தின்மத்தியில் யாவருங்காண அதிக பிரகாசத்தோடு மிதந்தது. அதில் முற்காலத்தில் வீற்றிருந்ததுபோலவே சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பது பேரும் விளங்கினார்கள். அப்போது அச்சங்கப் புலவர்களைப்பார்த்துப் பொய்யாமொழிப்புலவர் -

"உங்களிலே யானொருவனொவ்வுவனோ வொவ்வேனோ
திங்கட்குலனறியச் செப்புங்கள்—சங்கத்தீர்
பாடுகின்றசெந்தமிழ்க் கென்பைந்தமிழுமொக்குமோ
எடெழுதாரேழெழுவீரின்று."

என்னும் வெண்பாவைப்பாடி முடித்தவுடன் சங்கப்புலவர்களெல்லாம் அப்பாண்டியனைநோக்கி, இவர் நமது அம்சம்பெற்றவர், அருள்வாக்கி, அவர் வாக்குப்பொய்யாது, அது காரணத்தினால்தான் அவருக்குப் பொய்யாமொழிப் புலவரென்று உலகத்தில் பெயர்வழங்குகிறது, இதைச் சத்தியமாய் நம்பக்கடவாயென்றுசொல்லி அச்சங்கப்பலகையிலிருந்தபடியே பொற்றாமரைத்தீர்த்தத்தில் மறைந்தார்கள். இவையனைத்தையுங் கண்ணாரக்கண்டு தரிசித்த அப்பாண்டியன் பொய்யாமொழிப் புலவரிடத்தில் பயமும் பக்தியுமுடையவனாகி, அடியேன் அறியாமற் செய்த பிழையைப்பொறுத்து எனக்கு அருள்புரியவேண்டுமென்று பலவாறுகவந்தித்து அவருக்கு வேண்டியவளவில் பரிசளித்தனுப்பினான். அப்பொய்யாமொழிப்புலவர் அம்பிகா உபாசகராயிருந்ததால்அவ்வுமாதேவியின் பெயரிலேயே சதா அனந்தம் பாசுரங்களைப் பாடிக்கொண்டிருந்தனர். அவர் பாட்டின் நயத்தையும் மதுரத்தையுங்கண்டு முருகக்கடவுள், தம்மையும் அவர்பாடச் செய்விக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டு, அவர் அப்புலவரிடத்துப் பன்முறைவந்துகேட்டும், அப்புலவர் கோழியையும்பாடிக் குஞ்சையும்பாடுகிறதா? நான் பாடமாட்டேனென்று மறுத்துவிட்டனர். அதுகேட்ட அம்முருகக்கடவுள் இவரால் எப்படியாவது பாடல் பெறவேண்டுமென்கிற எண்ணத்தினால், ஒருநாள்அப்புலவர் ஓர் காட்டில் பாலைநிலத்தின் வழியாகப் போ

ய்க்கொண்டிருக்கும்போது ஓர் வேடவடிவங்கொண்டு எதிரே நின்று, நீர் யார்? உமது பெயரென்ன? என்றுகேட்டார். அதற்கு அப்புலவர் - என்பெயர் பொய்யாமொழிப்புலவர் என்றார். அதுகேட்ட முருகர் அப்படியானால் இப்பாலை வனத்தை வர்ணித்து நாயகி சம்போகத் துறையாக ஓர் வெண்பா எம்மீதிற்பாடும், இல்லாவிடில் உம்மைக் கொல்லுவேன் என்றார். அது கேட்ட அப்புலவர்பயந்து, அப்படியே பாடுகிறேன், உமது பெயர் என்னசொல்லுமென்றார். அவர் என்பெயர் முட்டையென்றார். உடனே,

"பொன்போலுங்கள்ளிப் பொறிபறக்குங்கானலிலே
யென்பேதைசெல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாயதெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங்காடு."

என்னும் வெண்பாவைப்பாடி முடித்தார். அதுகேட்ட வேடவடிவங்கொண்ட முருகக்கடவுள் - கள்ளியே பொறி பறக்குங்காட்டில் வேலமுள் எப்படி தைக்கும்? ஆகையால் உன் கற்பனை பிழை, பாலை நிலச்சிறப்பும் அமைவுடைத்தன்று, இப்போது நான் சொல்வதைக்கேளென்று,

"வீழுந்துளியந்தரத்தே வேமென்றும் வீழி
னெழுந்துசுடர் சுடுமென்றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாதகானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யாமொழிப் பகைஞர்போல்."

என்று அம்முருகக்கடவுள் பாடி முடித்தவுடனே அவ்வேடன் முருகக்கடவுளென்பதை அக்கடவுள் குறிப்பாலுணர்த்தப் புலவருணர்ந்து சாஷ்டாங்கமாக வணங்கிக்கொண்டு, என் பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்கு அம்முருகக்கடவுள் குஞ்சையே பாடமாட்டேனென்ற உன்னைக்கொண்டே அது பிறத்தற்கிடமாகிய முட்டையென்னும் பெயருடைய என்மேல் பாடச்செய்தேனென்று சொல்லி மறைந்தருளினார்.

பிறகு அப்புலவர் சிலகாலம் பொறுத்துத் தஞ்சைமாநகரம் சென்று அவ்வூரிற் சிவபிரானடியவனாகி யிருந்த வாணன் என்னும் பெயருள்ள ஒருதனிகன் இவர் வாக்காற்பாடல் பெறவேண்டுமென்று அதிக விருப்பத்துடன் பலதினம் வேண்டிக்கொண்டும், அவருக்குரிய பணிவிடைகளைச் செய்துகொண்டும், அவருக்குவேண்டிய திரவியங்களை அப்போதைக்கப்போது உதவிசெய்துகொண்டும் வந்தமையால், அவ்வாணன்மீது தஞ்சைவாணன் கோவை என்னும் ஓர் பிரபந்தத்தைப் பாடி முடித்தார். இவ்வாறாகச் சிலகாலம் கழிந்தபின்னர் பொய்யாமொழிப்புலவர் விதேகமுத்தி யெய்தினர். (இன்னும்வரும்.)

ஓர் கரடியின் கதை.

(தொடர்ச்சி.)

15-ம் அத்தியாயம்,

விளையாட்டுத்தோழர்கள்.

விக்கிரமவீரன் காணாமற்போன முதல் இரண்டொருதினம் அதைப்பற்றி மற்றக்கரடிகள்ஒன்றும் ஏக்கங்கொள்ளவில்லை. இதற்குமுன்னே விக்கிரமவீரன் பல தடவைகளிலும், மழைக்காலத்துக்குமுன்னே தனக்குப் பிரத்தியேகமாக ஒருவாசஸ்தலம் தேடிக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தபடியாலும், அதன் பிதாவாகிய மந்தானகன் அந்தச்சமயங்களில் மற்றக்கரடிகளைப்பார்த்து, விக்கிரமவீரன் தனியே வாசஞ்செய்வது நல்லதுதான், அது இதற்கு முன்னமே அந்தப்படி செய்திருக்கவேண்டும், எத்தனைநாள ஒருவன் குழந்தைபோல் வீட்டிற்குள்ளேயே பிறருடைய உதவியை எதிர்பார்த்திருப்பது? வயதானபிற்பாடு அவரவர்கள் தங்கள்வளையிலே சுவயேச்சையாக உயிர்வாழத்தான் முயலவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தபடியாலும் இரண்டொருநாள் விக்கிரமவீரன் வீட்டிற்குத்திரும்பி வராமலிருந்ததைப்பற்றி மற்றக் கரடிகளொன்றும் ஆச்சரியப்படவில்லை.

வீட்டைவிட்டுவெளியேபோன விக்கிரமவீரன் வெகுசீக்கிரத்தில் மழைக்காலத்திற்குமுன்னமே தன் நூதன வாசஸ்தலத்தை நமக்குக்காட்டாமற்போகிறதா? தன்படுக்கைக்குவேண்டிய வைக்கோல் செத்தை முதலியவற்றைத் தேடிக்கொண்டு அது இப்போது அதிக வேலையாயிருக்கிறதென்று மந்தானகன் மற்றக்கரடிகளுக்குத் தேறுதல்சொல்லிக்கொண்டுவந்தது.

விக்கிரமவீரன் வீட்டுக்குவராததைப்பற்றி ஒரு நல்லகாரணம் கற்பித்து மந்தானகன் சொல்லிக்கொண்டுவந்த விஷயத்தைக்கேட்கத் தாயாகிய உத்தமஜீவிக்கு மிகவும் விருப்பமாயிருந்தபோதிலும் நாளாவர்த்தியில் அதுவும் மற்றக்கரடிகளும் ஒருங்குசேர்ந்து அடவிமுழுமையும் தேடித்தேடிப்பார்த்தும் அதைக்காணாமையால் மழைக்காலத்துக்குமுன்னே அவைகள் உண்ணவிருந்த கடைசிவிருந்துக்காயினும் அதுவாராதாவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. பிரதிதினம் மாலையில் உத்தமஜீவி குகைக்குவெளியில் நெடுநேரம்வரையில் இருட்டிப்போகிறமட்டும் பனியில் முன்னும்பின்னுமாக உலாவிக்கொண்டு, காணாமற்போன தன்புத்திரன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.

விக்கிரமவீரன் மறுபடியும் வீட்டிற்குத் திரும்பிவருமென்று உத்தமஜீவிக்கு எவ்வளவும் நம்பிக்கையில்லை. பகற்பொழுது குறுகியும் குளிர்ச்சி மிகுந்தும், இராப்பொழுது நீடித்தும் பனிமிகுந்தும் இருக்கத்தலைப்பட்டபடியால் குகைவாயிற்படியை இனி மூடிவிடவேண்டுமென்றும், சிந்திப்போன பாலைப்பற்றி மேன்மேலும் துக்கித்துக்கொண்டிருப்பதனால் பயனில்லையென்றும், வாஸ்தவத்தில் விக்கிரமவீரனை யாராவது பிடித்துக்கொண்டிருந்தாலுஞ்சரி கொன்றுவிட்டிருந்தாலுஞ்சரி நாம் எத்தனைதான் எவ்வளவுபாடுபட்டுத்தேடினும் அதுமீளவரப்போகிறதேயில்லையென்றும் மந்தானகன் நியாயங் கூறியது.

இதைக்கேட்டு உத்தமஜீவி இனிதன்புத்திரன் வருமென்கிற கோரிக்கையைமுற்றும் விட்டுத் துக்கசாகரத்தில் மூழ்கியது. அந்தந்தஇடத்திற்குப்போய் அபாயத்திற்குள்ளாகும்படி நூதன நூதனமாகப் பதார்த்தங்களைக் கொள்ளையடிக்க விரும்பியதனாலல்லவா தமையனாகிய விக்கிரமவீரனுக்கு ஆபத்

துநேரிட்டிருக்குமென்று தம்பியாகிய சுமுகனும் முறுமுறுத்தது. சுமுகன் மழைக்காலமுழுவதும் தன் அறையில் தான்தனித்துப் படுத்துக்கொள்ள முடியாதென்றும், தனக்கு வெப்பமாயிருக்கத் தன் பக்கத்தில் யாராவது படுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், தன்னினும் இளைய குட்டிகள் படுத்துக்கொள்ளும் அறையில் இடமிருந்தால் அவைகளோடுகூடத் தான்படுத்துக்கொள்ளவேண்டுமென்றும்,இப்போது தன் தாயைவிட்டுப்பிரியத் தனக்கு இஷ்டமில்லையென்றும் சொல்லிச் சுமுகன்தன்தாயைப்பார்த்து, நீவந்துகூடப்படுத்துக்கொண்டுறங்கவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டது. இவ்வாறு சுமுகன் கேட்டுக்கொண்டும் உள்ளே வந்துபடுத்துக்கொள்ள மனமற்றதாயும், கணவனாகிய மந்தானகன் சொல்லும் ஆறுதலால் மனந்தேறாததாயும் உத்தமஜீவி இனம் குகைக்குவெளியேவந்து உட்கார்ந்துகொண்டு, தேவதாருவிருட்சங்கள் நிறைந்த கரும் அடவியைப்பார்த்துப்பார்த்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணாகித் திகைத்துக் கொண்டிருந்தது. அதுபார்த்துக்கொண்டிருந்த விருட்சங்களுக்குள்ளே தேவதாரு முதலிய சிலமரங்கள் இலை முதலிய யாவும் உதிர்ந்து தன்னைப்போல் எக்கற்று நிராதரவாயிருப்பதும், அசோக மரங்கள் மாத்திரம் பனிக்கு எவ்வளவும் சளையாமல் பச்சென்றிருப்பதும் அதன் கண்ணுக்குத்தோன்றின.

தௌர்ப்பாக்கிய ஸ்திதியிலுள்ள தாயாகிய உத்தமஜீவி விக்கிரமவீரனுக்கு என்னென்னவிதமான ஆபத்துகள் சம்பவித்திருக்கக்கூடுமோ அவற்றைப்பற்றி யெல்லாம் எண்ணியெண்ணி, வேட்டைக்காரர்கள் தங்கள் பயங்கரமான துப்பாக்கியினால் அதைக் கொன்றுதானிருக்கவேண்டுமெனக் கடைசியாகத் தீர்மானம் செய்துகொண்டது. இவ்வாறு தீர்மானித்துத் தன் அருமைப்புதல்வனை நினைத்து, "என்கண்ணே! கண்மணியே! உன்னைப்போல் இனியொருபுத்திரன் யான் காணப்போகின்றேனா? ஆபத்துவந்தகாலத்தில் தப்பித்துக்கொள்ள மனோதைரியமாயிருக்கவும், மற்றக்காலங்களில் அதிசாந்தமாயிருக்கவும் உனக்குத் தெரியுமே, கடைசியில் போய்வருகிறேனென்று என்னிடத்தில் சொல்லாமலும் திடீரென்று நீபோய் மீளாமல் மாண்டனையே! என்னிடத்தில் உனக்கு விசுவாசம் இவ்வளவுதானா?." என்று பிரலாபித்தது.

இப்படி இது வெளியேயிருந்து பிரலாபித்துக்கொண்டிருக்கையில் சுமுகன் இரண்டு சிறு குட்டிகள் படுத்துக்கொண்டிருந்த அறைக்குள் மெல்ல நுழைந்து, அதில் அதி வெப்பமாயிருந்த பாகம்பார்த்துப் படுத்துக்கொண்டது. அக்குட்டிகள் இதைத் தம்மிடத்தினின்றும் அப்புறப்படுத்த முடியாதவைகளாய் கூடியவரையில் அதனாலாகிய பிரயோசனத்தைத் தாமடையக் கருதி, அதனுடைய உரோமம் மிகவும் உஷ்ணமாயிருந்தபடியால் அதை நாற்புறமும் சுற்றிக் கெட்டியாய்க் கட்டிப்படுத்துக்கொண்டு சீக்கிரம் உறங்கிவிட்டன.

மந்தானகனுக்கு இனி விழித்திருக்க முடியவுமில்லை. நன்றாய்த் தூக்கம் பிடிக்கவுமில்லை. ஆனால் அது காணாமற்போன விக்கிரமவீரனுடைய அருமையையும் பெருமையையும் குறித்து உத்தமஜீவி பலவாறாகப் புகழ்ந்து துக்கித்துக்கொண்டு வக்கணைபாடி அழுதுகொண்டிருப்பதைக் கேளாமலிருக்கக் கூடியவரையில் முயற்சிசெய்து தன்படுக்கையில் தூக்கம்பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்தது.

இப்படியிருக்க உத்தமஜீவியும் இளைப்படைந்து, குட்டிகளுக்கு வெப்பமாயிருக்கும்படி மேலே வைக்கோலைப்போட்டுப் பத்திரமாய் மூடிவிட்டு

வெளிக்கதவைச் சாத்திக்கொண்டு தானும் படுத்துறங்கிவிட்டது. தன்துக்கத்தையும் மறந்தது.

ஐயோபாவம்! விக்கிரமவீரன் இங்கே தொழுவத்தில் கம்மென்று படுத்துக்கொண்டு சுகமாயிருப்பதையும், அதைப் பாதுகாத்து ஆகாரம்கொடுக்க விசுவாசமுள்ள நண்பர்கள் அதற்கிருக்கிறார்களென்பதையும் தாயாகிய உத்தமஜீவி அறிந்திலதே! அறிந்திருக்குமாயின் அது நல்லதூக்கம் தூங்கியிருக்கும்; இன்பத்தைத் தரத்தக்க கனவும் கண்டிருக்கும்.

பெருந்தன்மை யதார்த்தத்தில் எதனாலுண்டாகிறது?

உலகத்தில் ஒவ்வொருவனும் பெருந்தன்மையடையவேண்டுமானால் அவன் மனமொழிமெய்களினால் ஒழுக்கத்திற்சிறக்கவேண்டும். அவ்வாறு நல்லொழுக்கம்அமையப்பெறாத சிலர்-யாம் நற்குடியிற்பிறந்தோமாகையால் எம்முடையஒழுக்கம் எப்படியிருக்கினுமிருக்கலாம், யாம் யாவராலும் பூசிக்கப்படவேண்டுமென்று வீண்இறுமாப்புகொள்ளுகிறார்கள். குடிப்பிறப்பினாலே ஒருவனுக்கு மேன்மைமுற்றும் உண்டாவதில்லையென்று இங்குயாம் கூறவரவில்லை. யாதொருகுடிப்பிறப்பிற்குண்டாகும் மேன்மையும் ஒருகாலத்தில் அக்குடியிற்பிறந்த ஒருவரோ பலரோசெய்த நற்காரியங்களினாலும், அவர்களுடைய நல்லொழுக்கங்களினாலுமே உண்டாகின்றதென்று நாம் அறிந்துகொள்ளலாம். இந்துக்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு வருணங்களுக்குள்ளே அந்தணர் முதல்வருணத்தாரென்றல்லவோ யாவராலும் நன்குமதிக்கப்பட்டுவருகின்றனர். அவ்வருணத்தார் அவ்வாறுசிறந்ததற்குக்காரணமெல்லாம் அவர்கள் ஆதியில் சாஸ்திரப்பயிற்சியினாலும் விவேகவிளக்கத்தினாலும் நல்லொழுக்கத்தினாலும் ஏனையோர்களைக் காட்டிலும் மிக்கவர்களாயிருந்ததேயாம். இப்படியே ஒவ்வொருவருணத்தாரும் தம்முடைய வருணத்தின் பெருமையைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அவ்வருணத்தினர் எவராவது முன்னே சிலசிறந்த நற்கருமங்களைச்செய்திருந்தால் அவற்றையெடுத்து உதகரித்துப்பிறகு தம்வருணத்தின்பெருமையைப் பேசிக்கொள்வார்கள். இந்தவிஷயங்களையெல்லாம் யோசித்துப்பார்க்கையில், ஒழுக்கமே குடிப்பிறப்பின் மேன்மைக்குக் காரணமென்று தெளிவாய் விளங்குகிறது.

"பிறப்பொக்குமெல்லாவுயிர்க்குஞ்சிறப்பொவ்வா
செய்தொழில்வேற்றுமையான்."

மானிடப்பிறவிபெற்ற எல்லாவுயிர்களும் பிறப்பியல்பினாலே ஒருவரையொருவர் ஒத்தேயிருக்கின்றார்கள்; ஆனால் அவரவர்கள்செய்யும் நற்காரியங்கள், தீக்காரியங்களினாலுமே தாம் தாம் சிறப்படைவதும் தாழ்வடைவதுமாயிருக்கிறார்களென்று தெய்வப்புலவரும் தம்முடைய பொதுமறையில் கூறியிருக்கின்றனர்.

கலிங்கநாட்டையரசாண்டுவந்த வரகுணனென்னும் அரசனுக்கு நெடுமாறனென்னும் புத்திரனொருவனுண்டு. வரகுணனோ நல்லொழுக்கத்தில் மிகவுஞ்சிறந்தவனாகித் தெய்வபக்தி பரோபகாரம் முதலிய நற்குணங்களைப் பூரணமாயடைந்திருந்தான். "எல்லாமொறுக்குமதுகை யுரனுடையாளன் பொறுக்கும்பொறையேபொறை." (யாவரையும் எளிதில் கோபித்துத் தண்டிக்கும் ஆற்றலுடையவேந்தன் அவரவர்களுடைய குற்றத்தைப்பொறுத்திருப்பானாயின் அவனுடைய பொறையைத் தான் வாஸ்தவத்தில் பொறையென்றுசொல்லவேண்டும்) என்று பெரியோர்கூறிய பிரமாணத்திற்கேற்க அவ்வரகுணனிடத்துப் பொறையுடைமையென்னுங் குணமும் விளங்கிக்கொண்டிருந்தது. இழிகுலத்தாரென்று சிலரைத் திரஸ்காரம்பண்ணுவதும், உயர்குலத்தாரென்று சிலரைப் பூஜிப்பதும் அவனிடத்துக்கிடையா. அவரவர்களுடைய ஒழுக்கத்திற்கும் விவேகத்திற்கும் ஏற்றபடி அவரவர்களை நன்குமதித்து அவ்வரசன் வருநாளில், அவனுடைய அரசிளங்குமாரனாகிய நெடுமாறன் பிதாவின் சற்குணங்கள் அமையப்பெறாதவனாகியிருந்தான். அவன் தான் இராஜகுடும்பத்திற்பிறந்த காரணத்தினாலேயே தன்னை ஏனைய யாவரும் வழிபடவேண்டுமென்றும், ஒழுக்கத்தினாலும் கல்வி முதலியகுணவிசேஷங்களினாலும் தன்னைக்காட்டிலும் சிலர் எவ்வளவுசிறந்தவர்களாயிருக்கினும் அவர்கள் தன்னிடத்துமாத்திரம் கடவுளிடத்துப்பாராட்டத்தக்க அவ்வளவுவிசேஷ பயபக்தியைப்பாராட்டவேண்டுமென்றும் எண்ணங்கொண்டுநடந்துவருநாளில், பிதாவாகிய வரகுணன் சில மந்திரிகள்-வித்வான்கள் முதலானவர்களைக்கொண்டு தன் புதல்வனுக்குப் புத்திமதிகள் சொல்வித்தும் அவனுடைய அகங்காரம் இம்மியும் குறைவுபட்டிலது, பிரதானிகள், சமஸ்தானவித்வான்கள்முதலியோர் அவனுடைய முரட்டுத்தனத்துக்கு அஞ்சி, அவனுடைய நடவடிக்கையைப் பொறுத்துவந்தார்கள். வயோதிகத்தன்மையடைந்தவரகுணன் தன்புத்திரனுடைய நடத்தைக்காகவும் குணத்திற்காகவும் துக்கித்து, ஐயோ! இவன் இவ்வாறு பிரதானிகள்முதலிய பெரியோரைத்தழுவாமல் இராஜவம்சத்தில் தான்பிறந்தவனென்கிற அகங்காரமேலீட்டினால் இறுமாப்படைந்திருப்பானாயின், நமக்குப்பிறகு ராஜ்ஜியத்தில்யாவரும் இவனுக்குப்பகைவர்களாகி இவனுடைய அரசமாற்றார்க்குளிதில் இரையாய்விடுமேயென்று பயந்துகொண்டிருந்தான். வரகுணன் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில் தன்குமாரனுக்கு வயதுவந்துவிட்டபடியால் அவனுக்குவேறொரு அரசனுடைய புத்திரியை விவாகம்செய்வித்தான். விவாகம் நடந்தேறிய இரண்டுவருஷத்திலெல்லாம் ஒருஆண்பிள்ளைபிறந்தது. சந்தோஷமிகுதியினாலே வரகுணனும் நெடுமாறனும் ஊர்முழுவதும் விழாவுகொண்டாடி யாவருக்கும் பரிசுமுதலிய அளித்துத்தொட்டில் போடுவிப்பதற்காக ஒருநாள் நியமித்தார்கள். இப்படியிருக்கையில் வரகுணஇராஜன் தன் சமஸ்தானத்திலே உத்தியோகத்திலமர்ந்திருந்த ஓரொளியசேவகனுக்குத் தன

க்குப்பேரன்பிறந்ததினத்திலேயே ஒரு ஆண்குழந்தை பிறந்ததென்று
கேள்விப்பட்டு, இதுதான்நல்லசமயமென்றுகருதி அச்சேவகனையழை
த்து, உன் குழந்தையை என்பேரனுக்குத் தொட்டில்போடுவிக்க நிச்
சயித்திருக்கும் இன்னதினம் காலையில் ஒருவருக்கும் தெரியாமல் எ
ன்படுக்கையறையிலே கொண்டுவந்துவளர்த் தென்றுகட்டளையிடவே,
அச்சேவகன் அந்தப்படியே அச்சுபதினக்காலையில் கொண்டுவந்து தன்
அருமைக்குழந்தையை வரகுணனுடைய படுக்கையறையில் வளர்த்தி
விட்டுப்போனான். அச்சுபதினத்தில் உயர்ந்த தந்தத்தினாற்செய்யப்ப
ட்டதும், நாற்புறம் நவரத்தினங்களிழைக்கப்பட்டதுமான ஒருதொ
ட்டிலைப் பரிஜனங்கள் பவழக்கால்கள் நாற்புறமும் நட்டு மத்தியில் மு
த்துவடத்தினால் தொங்கவிட்டு அதிவிநோதமாயமைத்து நறுமணங்க
மழும் புஷ்பங்களைக்கொண்டு எங்கும் அலங்காரஞ்செய்வித்தபிறகு, அ
னேக மங்கலவாத்தியங்கள் முழங்கவும் சுமங்கலஸ்திரீகள் பல்லாண்டு
வாழ்த்தவும் இராஜஸ்திரீ இராஜச்செல்வச்சிறுமதலையை ஆடை ஆப
ரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டுவந்து அத்தொட்டிலில் படுக்க
அக்குடும்பத்தில் மூத்தோனானபடியால் வரகுணன்வ
அக்குழந்தைக்கு ஆசிகூறி முத்தமிடவேண்டியவனாகை
யால் அவன் அம்முறைமைப்படி முன்னே அந்தத்தொட்டிலண்டைவ
ரும்போது ஒருவருக்குந்தெரியாமல் தன்னுடைய அங்கிக்குள்ளே ம
றைத்துவைத்திருந்த சேவகன் குழந்தையையுங்கூடப் படுக்கவைத்
தான். இந்தவிஷயம் ஒருவருக்குந்தெரியாது. உடனே வரகுணன் த
ன்புதல்வனாகிய நெடுமாறனை அழைத்து, மைந்தா! இச்சுபமுகூர்த்த
காலத்தில் குழந்தைமுகத்தைப்பார்த்து உச்சிமோந்து முத்தங்கொடு
என்றுசொல்லி, அந்தஇடத்திலிராமல் வேறோரிடத்திற்குப்போய்விட்
டான். உடனே தன் அருமைப்புதல்வனையெடுக்கக் கைநீட்டிய நெடுமா
றன் அத்தொட்டிலில் ஒரேமாதிரியாக அலங்கரிக்கப்பட்டு இரண்டுகு
ழந்தைகளிருக்கக்கண்டு, தன் குழந்தை இன்னதுதானென்று நிச்சயிக்
கக்கூடாதவனாகித் தன் மனையாட்டியையழைத்து, நம் குழந்தை எது?
இத்தொட்டிலில் இரண்டுகுழந்தைகள் என்னவிதமாய்வந்தன? என்
றான். அதுகண்டு அவளுந்திடுக்கிட்டு, தன்குழந்தை இன்னதென்று
தெரிந்தெடுக்கச் சக்தியற்றுப்பிரமித்துநின்றாள்: வரகுணன் அச்சே
வகனுடைய குழந்தையையும் சற்றேறக்குறைய தன்பேரனைப்போல
வே ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்துவிட்டபடியாலும், அச்சே
வகன் குழந்தையும் சற்றேறக்குறைய தன்பேரனைப்போலவே அழ
குவாய்ந்திருந்தபடியாலும், அதற்குமுன் பத்துநாளாகப்பார்த்துப் பா
ல்கொடுத்துவந்த அத்தாய்க்கும் தன் குழந்தையின் அடையாளந்தெ
ரியாமல் கலக்கமுற்றுநிற்கையில், நெடுமாறன் திப திப வென்று தன்
பிதாவண்டைபோய், அண்ணா! தொட்டிலில் இரண்டு குழந்தைகள்
எப்படிவந்தன? என் மனைவி ஈன்றது ஒன்றுதானேயென்று கேட்க,
அப்போது வேறு ஏதோ இராஜகாரியத்தில் அதிகவேலையாயிருந்தவ

ன்போல் நடித்த வரகுணன் அதிவிரைவாகத் தன்னை வினவிய நெடுமாறனைநோக்கி, அப்பா! நம்மிடத்து அதிகவிசுவாசமாக ஊழியஞ்செய்துவரும் சேவகனொருவன் தனக்குக் குழந்தைபிறந்தால் அதைச்சற்றுநேரம் நமது தொட்டிலில் வைத்துப்பார்க்க வேண்டுமென்று நெடுநாளாக என்னைக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டிருந்தான்; சுவாமிகிருபையினால் எனக்குப்பேரன்பிறந்தால் அப்போது தொட்டில் போடும்போது அப்படியேசெய்யலாமென்று யான் முன்னேவாக்களித்தேனாகையால் அவ்வாறு அவன் இப்போது என் அநுமதியின்மேல் செய்திருக்கிறான்; ஆயினும் இராஜகுடும்பத்திற்பிறந்த நம் குழந்தை யின்னதென்பதைப்பார்த்த மாத்திரத்திலறிந்துகொள்ளக்கூடாதா? போய் நன்றாய்ப்பாரென்று சொல்லியனுப்பினான். மறுபடியும் வந்து எவ்வளவு நன்றாகத் திருப்பித் திருப்பிப்பார்த்தும் சந்தேகம் மேலிட்டு அங்கிருந்த நெடுமாறன் முதலிய யாவரும் தியங்கிக்கொண்டிருக்கையில் வரகுணன்வந்து, அவ்விரண்டு குழந்தைகளுக்குள்ளே கால்விரலில் ஒரு சிறுநாடா கட்டியிருந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு, தன்மகனையும் அவனைப்போலவே இறுமாப்படைந்திருந்த அவன் மனைவியையும்பார்த்து, பிறப்பினாலே பெருந்தன்மைவிளங்குமென்[illegible]து எவ்வளவு பேதமை! நாம் இராஜவம்சத்திற்பிறந்தோமென்னுங் காரணத்தினாலேயே யாவரினும் நாம் மேம்பட்டோமென்று கருதுவது எவ்வளவு மதிமோசம்! இதுதான் நம்குழந்தை, இதோ இந்த ஒரு சிறு நாடாவைமாத்திரம் அடையாளமாக நான் கட்டிவைத்திராவிடில் வித்தியாசம் தெரிந்தேயிராது; ஆகையால் ஒவ்வொருவருக்கும் பெருந்தன்மையும் புகழும் ஒழுக்கத்தினாலேவருமேயன்றிப் பிறவியினால் வருமென்பது சரியல்ல, பிறவியைநோக்க நாம் அனைவரும் பரமபிதாவாகிய பகவானுடைய குழந்தைகள், நாம் அவருக்கு நல்லவர்களாவதும் கெட்டவர்களாவதும் நம்முடைய ஒழுக்கத்தினாலேதானென்று புத்திவரும்படிசொல்லவே; அன்றுமுதல் நெடுமாறன் மமதையைவிட்டு ஒருவாறுயாவரையும் நன்குமதித்து வரத்தலைப்பட்டான்.

ஆயினும் பிறப்பினாலேதான் உயர்ந்தவனென்கிற எண்ணம் நெடுமாறனிடத்தில் நெடுநாளாக வேரூன்றியிருந்தபடியினால் அதுபற்றற்றுப்போகவில்லை. பின்னும் ஒருநாள் நெடுமாறன் அதிக திண்டியினாலும் அதற்கேற்ற தேகப்பயிற்சிமுதலியவை இல்லாமையினாலும் மிகவும் ஸ்தூலித்துவிட்டபடியால் உள்ளிருக்கும் கெட்ட உதிரத்தைச்சற்றே கீறிவெளிப்படுத்துவது உத்தமமென்று வைத்தியர்சொல்ல, அந்தப்படியே ஒருநாள் வைத்தியர் அவனுடைய உதிரத்தை வெளிப்படுத்தும்போது வரகுணன் அதை ஒரு சிறு ஏனத்தில் பிடித்துவைக்கும்படி சிலருக்கு உத்தரவுசெய்தான். அதேதினத்தில் வரகுணன்-தன்னுடைய வேலைக்காரப் பையனொருவனுடைய உதிரத்தையும் சற்றேவெளிப்படுத்தச்சொல்லி அதையும் வேறொரு ஏனத்தில் பிரத்தியேகமாய் வைக்கும்படி கட்டளையிட்டான். சற்றுநேரம் பொறுத்து